அதற்கு சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால், அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இதுபோன்று தமிழகத்தில் உள்ள தொல்பொருள் ஆய்வுத் துறை வசம் உள்ள புராதனச் சின்னங்களைச் செம்மைப்படுத்திட சுற்றுலாத் துறை மூலமாக தமிழக அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது விழுப்புரம் மாவட்டத்திலே வரக்கூடிய சூழல் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏற்கெனவே சுற்றுலாத் துறைமூலமாக பல பணிகள் நடைபெற்று வருகின்றன. விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி என்பதால், தனிக்கேள்வியாகப் போடும்பட்சத்திலே பராமரிப்பு சம்பந்தமான புள்ளிவிவரங்களைப் பெற்று, அவர்களுக்கு உரிய முறையிலே பதில் தெரிவிக்கப்படும் என்பதை நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பேருந்து வசதி

***44—திரு. அ. நாஞ்சில் முருகேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்கு மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2011 ஆகஸ்ட் 10]

கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக களியக்காவிளைக்குச் செல்வதற்கான சாலையில் கீழமணக்குடிக்கும், மேலமணக்குடிக்கும் இடையிலுள்ள பாலம் கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட சுனாமியால் முழுமையாகச் சேதமடைந்துவிட்டது. இந்தப் பாலத்திற்கு அருகில் பாதசாரிகளும் சிறு வாகனங்களும் செல்லும் வகையில் 2005—ல் தற்காலிகமாக ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 23.30 கோடி செலவில் புதிய பாலம் கட்டுவதற்கானப் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணி டிசம்பர் 2011—ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலம் வேலை முடிவடைந்தவுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக கன்னியாகுமரியிலிருந்து களியக்காவிளைக்குப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடையை அளிக்க வாய்ப்பு அளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. அதுபோல, நாகர்கோயில் தொகுதியிலே, தி.மு.க. காங்கிரஸ் உள்ள பகுதியிலே என்னை 31 வருடங்களுக்குப் பிறகு அங்கே நிற்க வைத்து, ஜெயிக்க வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், என் குடும்பத்தாரும் நன்றியுடன் இருப்போம்; அவர்களை எப்போதும் மறக்க மாட்டோம் என்றும், எப்போதும் நன்றியுடன் அம்மா அவர்களுடனே இருப்பேன் என்று மீண்டும் சொல்லுகிறேன். எங்களுடைய பகுதியிலே கடந்த தி.மு.க. ஆட்சியிலே பஸ்களை எல்லாம் hawker கடையிலே விற்றுவிட்டார்கள் அம்மா. அதனால் கிராமப் பகுதிகளிலே பஸ்கள் சரியாகப் போவதில்லை. கிராமப் பகுதிகளிலே குறிப்பாக பள்ளிக்குச் செல்லும் மாணவிகளும் பொது மக்களும் சரியாக பஸ் வராத காரணத்தினாலும், free pass கிடைக்காத காரணத்தினாலும், அந்தப் பகுதி மக்கள் மிகவும் தொலைவிலே உள்ள பள்ளிகளுக்குப் போகாமல் இருக்கக்கூடிய பகுதிகள்

நிறைய இருக்கின்றன அம்மா. அதனாலே பிரைவேட் பஸ்கள்தான் போகும் அம்மா. அந்த பிரைவேட் பஸ்ஸில் செல்ல பஸ் பாஸை பெறுகின்ற அளவுக்கு எப்படியாவது உதவி செய்து தர வேண்டுமென்று அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004 ஆம் ஆண்டு சேதமடைந்த அந்தப் பாலம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மேற்படி பாலப் பணிகளை முடிப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தப் பாலப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணிகள் டிசம்பர் 2011—க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பாலப் பணிகள் முடிவுற்றவுடன் கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக களியக்காவிளைக்கு மாணவிகள், பொதுமக்கள் செல்வதற்கு ஏதுவாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எப்போதும் நன்றி சொல்ல வேண்டுமென்றால், உடனே நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்த பிறகு, கையைக் கொஞ்சம் உயர்த்தினால் எனக்குத் தெரியும். இல்லையென்றால் தெரியாது.*

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *அம்மா அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரும் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக*

2011 ஆகஸ்ட் 10]

முதலமைச்சராக வந்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உண்மையிலேயே அம்மா அவர்கள்தான் இதுபோல எப்பொழுதும் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று சொல்லி, கண்டிப்பாக அதை எல்லோரும் அப்படியே எப்போதும் சந்தோஷமாகச் சொல்லுங்கள் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவரவர்களுடைய தொகுதிகளிலே, பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று பொது மக்களிடமிருந்து மனுக்கள் வருகின்றன. நிதிநிலை அறிக்கையிலே 3,000 பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பேருந்துகள் வாங்கப்படும்போது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியிலேயும் குறைந்தபட்சம் 10 புதிய பேருந்துகள் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பல்வேறு இடங்களில் பேருந்துகள் இயக்குவதாக அறிவிக்கப்பட்டு சில மாதங்கள் மட்டுமே இயக்கப்பட்டு, அந்தப் பேருந்துகள் எல்லாம் சில மாதங்களிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றன. பொது மக்களினுடைய நலன் கருதி எங்கெல்லாம் பேருந்துகள் தேவையோ அங்கெல்லாம் இயக்கப்பட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3,000 பேருந்துகளைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வாரி வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய வேண்டுகோளை ஏற்று எங்கெல்லாம் பேருந்து வசதிகள் இல்லையோ அங்கெல்லாம்*

மாண்புமிகு அம்மா அவர்கள் 3,000 பேருந்துகளை வழங்கியதன்மூலம் அந்தப் பகுதிகளுக்கு பேருந்து வசதிகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இன்றைக்குப் போக்குவரத்து அதிகமாகி கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பஸ்ஸுக்கு மேலேயே பயணம் செய்யக்கூடிய நிலைமை பல மாவட்டங்களிலே, குறிப்பாக, கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதியிலே, காலையிலே மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்கிற நேரத்திலேயும், மாலையிலே வீடுகளுக்குத் திரும்புகிற நேரத்திலேயும் பேருந்து வசதிகள் இல்லாத காரணத்தால் பேருந்துகளுக்கு மேலேயே பயணம் செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு அதிகப் பேருந்துகளை விடுவதற்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்குச் செல்கின்ற மாணவ, மாணவிகள் காலையிலும், மாலையிலும் இட நெருக்கடியின் காரணமாகப் பேருந்துகளில், ஒரு சில இடங்களில் அதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. பள்ளி மாணவ, மாணவிகள் செல்வதற்காக, சென்னையில் முதல்கட்டமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப்பெற்று சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று, எங்கெல்லாம் காலை, மாலை வேளைகளில் பேருந்து வசதிகள் தேவையோ, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப்பெற்று அங்கெல்லாம் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.